கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.

*DEPOSITION OF WITNESS –Crl. Misc.39*

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Calandar Case .No. 324/2024**

Deposition of witness for Petitioner: L.W / P.W.

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. முத்துக்கருப்பையா |
| கணவர்/ தந்தை பெயர் | : | முத்து |
| தொழில் | : | சிறப்பு சார்பு ஆய்வாளர், வீரபாண்டி காநி |
| கிராமம் | : | தேனி |
| தாலுகா / மாவட்டம் | : | தேனி |
| வயது | : | 57/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09/07/2026

*(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)*

**முதல் விசாரணை**

நான் வீரபாண்டி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மற்றும் புலன் விசாரணை அதிகாரியாக இருந்த சார்பு ஆய்வாளர் கோகுலகண்ணன் என்பவர் பணி ஓய்வில் சென்றுவிட்ட காரணத்தினால், ஆவணங்களின் அடிப்படையிலும் அவரது கையொப்பம் நன்கு தெரியும் என்பதாலும் இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 30.03.2024 அன்று 08.00 மணிக்கு நிலைய பொறுப்பில் சார்பு ஆய்வாளர் இருந்தபோது, தேனி க. விலக்கு அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்து அ.சா.1–டம் புகார் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண் . 104/2024 ஆக இதச பிரிவுகள் 294(b), 323, 324. 506(ii), மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு4–ன் படியும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். ( **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** புகாரையும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். மற்ற நகல்களை உயர்அதிகாரிகளின் பார்வைக்கு வைத்தார். அன்றைய தினமே இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடம் 09.00 மணிக்கு சென்று சாட்சிகள் பரமசிவம் மற்றும் பால்ராஜ் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். (**அந்த பார்வை மகஜர். அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது மாதிரி வரைபடம்**

**அ.சாஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது)** . சாட்சிகள் வைரவன், சென்னம்மாள், சின்னகருப்பையா ஆகியோரையும், மகஜர் சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மையென தெரிந்து எதிரிகளை தேடிவந்த நிலையில் அன்றைய தினமே பகல் 12.00 மணிக்கு தாடிச்சேரி பேருந்து நிறுத்தத்தில் வைத்து எதிரிகளை காரணம் கூறி கைது செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். காயம்பட்ட அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரிஷிக்குமார் விசாரித்து காயச்சான்று கிடைக்கப்பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார். (**அந்த விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.6 மற்றும் அதன் பின்புறம் உள்ள சான்று அ.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது*).*** படிவம் *91* மூலம் எதிரி பயன்படுத்திய கத்தியை அத்தாட்சியில் கைப்பற்றி நீதிமன்றத்தில் சமர்பித்து *RPR No.7/2024* எண் பெற்றேன்*.* **படிவம் *91* அ.சா.ஆ*.8* ஆக குறியீடு செய்யப்படுகிறது*.* அத்தாட்சி அ.சா.ஆ*.9*ஆக குறியீடு செய்யப்படுகிறது*).* மேற்படி கத்தி சாபொ*1* ஆக குறியீடு செய்யப்படுகிறது*.*** அன்றைய தினமே தனது விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக மேற்படி பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா*.1* கொடுத்த பொய்யான புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல*.* சாட்சிகளை சொன்ன நேரத்தில் விசாரிக்கவில்லை என்றும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் தயாரிக்கப்படாமல் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல*.* எதிரிகளை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்வில்லை என்றால் சரியல்ல*.* எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்க்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல*.* இந்த வழக்கில் சான்று பொருட்கள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் அத்தாட்சியில் வைத்து கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல*.*

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.09 21:13:38 +0530